முயன்று வெற்றி பெற்று விட்டதாக அவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலும், கர்நாடகாவிலும் சி.பி.எம். கட்சிக்குள் அவை ஊடுருவி விட்டன என்று அக்கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானமே ஒப்புக் கொள்கிறது. அமெரிக்கத் தன்னார்வ அமைப்பிடம் பணம் வாங்கிய விவகாரத்தைக் காட்டித் தமிழக சி.பி.ஐ. பிளவு பட்டது. ஆனால் இந்தப் போலிகள் புரட்சிகர இயக்கங்கள் மீது அவதூறு செய்கின்றனர்.

சமீபத்திய போடி கலவரத்தில் நக்சல்பாரிகள், விவசாயிகள் விடுதலை முன்னணி சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது என்று ''தீக்கதிர்'' எழுதியது. உண்மையில் சாதிக் கலவரத்தை எதிர்த்து துணிவோடு அங்கு போராடியவர்கள் புரட்சியாளர்கள் தான்! இப்படி ஜாதி, மதப் பிரச்சினைகள், தேசிய இன விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்க முடியாதபோது எல்லாம் ஏகாதிபத்திய சதி, ஊடுருவல் என்று அவதூறு பேசித் தட்டிக் கழிப்பது போலிகள் வாடிக்கையாகப் பின்பற்றும் கொள்கையாகவே உள்ளது. இந்த விவகாரத்தில் இவர்கள் பாசிச ராஜீவ் கும்பலையும் விஞ்சி விட்டார்கள் என்று கூறலாம்.

## ஜே.வி.பி. - பிளாட் பற்றி...

★ *ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், இலங்கை இனவெறி அரசையும், இந்திய ஆளும் கும்பலின் விஸ்தரிப்பு நோக்கத்தையும் எதிர்த்து மக்கள் திரள் பாதையிலும், துரோகிகளை முறியடித்தும் வீறு நடை போட்டுக் கொண்டு வரும் மக்கள் விடுதலை முன்னணி - ஜே.வி.பியை நமது புதிய ஜனநாயகம் ஒரு சிங்கள பயங்கர வாதிகள் என்று சித்தரிப்பது சரிதானா?*

*சந்திரமோகன் - ஊற்றங்கரை*

● தவறான தகவல்களின் அடிப்படையில் இக்கேள்வி அமைந்துள்ளது. ஜே.வி.பி ரஷ்யாவைச் சமூக ஏகாபதிபத்தியம் என்று கருதவோ எதிர்க்கவோ இல்லை. சோசலிச நாடாகவே கருதுகிறது. இந்தியாவைத்தான் ஏகாதிபத்தியம் என்று வரையறுத்து இதன் விஸ்தரிப்பு நோக்கத்தை எதிர்க்கிறது. அதற்காக ஆதரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. 'இந்திய ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்குத் துணை போகும் துரோகிகள்' என்று இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறது; தமிழ், சிங்கள இனங்களிடையே சமஉரிமை என்று பேசினாலும் தேசிய இனங்கள் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை ஜே.வி.பி. ஏற்கவில்லை. ''மக்கள் திரள் பாதையிலும் துரோகிகளை முறியடித்தும் வீறுநடை போடு''வதாகக் கூறுவதும் தவறு. தொழிலாளர் - மாணவர் வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற மக்கள் திரள் வடிவங்களை மேற்கொண்டாலும் அவை இரண்டாம் பட்சமானவை தான்! இரகசிய சதி போன்ற தனிநபர் பயங்கரவாதச் செயல்களே அதன் பிரதான வழிமுறையாக உள்ளது என்பதே உண்மை. ஜே.வி.பி.யை ஏன் சமூக பாசிச இயக்கமாகக் கருகிறோம் என்பதற்கான விளக்கத்துக்கு இந்த இதழில் பிரசுரித்துள்ள ஜே.வி.பி.பற்றிய சிறப்புக் கட்டுரையைப் படிக்கவும்.

★ *ஜே.வி.பி.யை சமூக பாசிச பயங்கரவாத இயக்கமென ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதன் பொருள் என்ன? ஜே.வி.பியின் கொள்கை, இலட்சியம், நடைமுறை ஆகியவற்றை விளக்குக.*

**— வாசகர் வட்டம், கல்லை**

● ஜே.வி.பி. பற்றிய சிறப்பு கட்டுரையைப் படிக்கக் கோருகிறோம்.

★ *இந்திய ஆளும் கும்பலின் தலையீட்டை, ஆதிக்கத்தை எதிர்த்து தேசபக்த போராட்டத்தை நடத்தம் ஜே.வி.பியையும் விடுதலைப் புலிகளையும் நிபந்தனையின்றி ஆதரிப்பதில் என்ன தவறு?*

*— அறிவுமணி, ஊற்றங்கரை*

● நிபந்தனையின்றி ஆதரிக்க வேண்டுமானால் அவை சரியான நிலைப்பாடுகளும் வழி முறைகளும் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஜே.வி.பி.யும் விடுதலைப் புலிகளும் அப்படியில்லை. குறிப்பாக வென்றெடுக்கப்பட வேண்டிய இடைநிலை மக்களையும், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஜனநாயக வாதிகளையும், அம்பலப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டிய சமரச சக்திகளையும் கூட எதிரிகளாகப் பாவித்து பாசிச முறைகளில் கொலை செய்கிறார்கள். பிறகு எப்படி நிபந்தனையின்றி ஆதரிக்க முடியும்?

★ *ஈழப் பிரச்சினை பற்றி மிகமிகத் தெளிவானதொரு சிறப்பான ஆய்வும் இயக்கங்கள் ஒவ்வொன்றின் நிலை பற்றியும் தொடர்ந்து சிறப்பாக வெளியிட்டீர்கள். ஆனால் 'பிளாட்' (PLOTE) தோழர் உமா மகேஸ்வரனின் கொலை பற்றி எந்தத் தகவலும் கொடுக்கப்படவில்லையே, ஏன்?*

● இந்த ஆண்டு ஜூலை 13ந் தேதி அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலைகள் நடந்தன. அடுத்தடுத்து உமா மகேஸ்வரன் கொலை பிரபாகரன் கொல்லப்பட்டதாக வதந்தி ஆகிய செய்திகள் வந்தன. இதற்கு முன்பாகவே ஜூலை 16-31 புதிய ஜனநாயகம் இதழைத் தயாரித்து அச்சிட்டு விட்டோம். இவை பற்றி அடுத்த இதழில் எழுதவிருந்தோம். ஆனால் இந்தியப் படை விலக்கத்துக்கு இலங்கை அதிபர் கெடு வைத்தது, இந்திய - இலங்கை கெடுபிடி போர், மோதல் நிலைமை, திடீர் சமரசம் - சரணடைவு என்று அரசியல் நிலைமைகள் வேகமாக மாறிக் கொண்டிருந்தன. அப்போது இலங்கை அரசியலில் பெரும் வீச்சை ஏற்படுத்திய ஜே.வி.பியின் வளர்ச்சி முக்கியமானதாகியது. இந்த நிலைமைகளில் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், உமா மகேஸ்வரன் கொலைகள் பற்றி எழுத முடியாமற் போனது.

கொலை, கொள்ளை, கடத்தல் முதலிய சமூக விரோத கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டது; இந்திய உளவுப் படையான ''ரா''வுக்கு இயக்கத்தை அடகு வைத்ததோடு அதன் உளவாளிகள் தனி இயக்கத்தின் மூலமாக ஈழ விடுதலை எதிர்ப்பு நடவடிக்கைகள் செய்ய இடமளித்தது; 200க்கும் மேற்பட்ட சக போராளிகளை கொடிய - மிருகத்தனமாக முறையில் கொன்றது; மாலத்தீவுக்கு 'கூலிப்படை' அனுப்பியது; கடைசியாக இந்திய ஆக்கிரமிப்பாளர்களிடமும், இலங்கை பாசிச ஆளும் கும்பலிடமும் தனது துரோகத்தனத்துக்கு பேரம் பேசியது; போராளிகள் களத்திலே செத்து மடியும் போது ஆடம்பர சுகபோகத்தில் மூழ்கி கிடந்தது - இப்படி உமா மகேஸ்வரனின் குற்றங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். சுருக்கமாகக் கூறினால், மார்க்சிய - லெனினியவாதி, போராளி என்ற வேடமணிந்த ஒரு கிரிமினல் மஃபியா கும்பலின் தலைவனாகவே வாழ்ந்து மடிந்தார் எனலாம். தனது சொந்த அமைப்பைச் சேர்ந்த தோழர்களையே எந்த முறையில் தீர்த்துக் கட்டினாரோ அதே முறையில் அவருக்கு முடிவு வந்தது. தியாக சீலரான போராளி சந்ததியாரின் கண்களைத் தோண்டி, கை, கால்களை வெட்டிக் கடலிலே வீசிக் கொன்ற உமா மகேஸ்வரனின் சாவுக்காக எந்த மனந்தான் சலனப்படும்?

## புரட்சி எப்படி...?

★ *இருப்பதை இல்லாதவர்களுக்குக் கொடுக்க பலாத்காரமா? சாத்வீகமா?*

● 'இருப்பதை இல்லாதவர்களுக்குக் கொடுப்பது' உட்பட எல்லா சமூக, பொருளாதார சமத்துவத்துக்கும் அவசியமானது அரசியல் அதிகாரம். ஏற்கனவே அரசியல் அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஏற்ற தாழ்வான சமூகத்தைப் பாதுகாப்பவர்கள் பேசுவதுதான் சாத்வீகம். ஆனால் ஆளுவது பலாத்காரமாகத்தான்! எனவே அரசியல் அதிகாரத்தை உழைக்கும் மக்கள் கைப்பற்றும் புரட்சியைப் பிரசவிக்கும் மருத்துவச்சி பலாத்காரம்தான்!

★ *அரசியல்வாதிகளைக் குறை கூறுகிறீர்கள். அவர்களை அடக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம்?*

● இப்போதைக்கு அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தலாம். போதிய மக்கள்' ஆதரவு இருப்பின் உள்ளூர் அளவில் 'மக்கள் நீதிமன்றங்களில்' வைத்து விசாரித்து தண்டிக்கலாம். மக்களின் முழு ஆதரவும் பெற்று அமைப்பு ரீதியில் திரட்டி புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவும்போது அவர்களை அடக்கி ஒடுக்கி விடலாம். குற்றங்களுக்கேற்ப தண்டனை வழங்குவதோடு மீண்டும் தலையெடுக்காதவாறு புரட்சியைத் தொடர்ந்து நடத்தவும் வேண்டும்.

★ *சமுதாயத்தில் பெண்களின் நிலை மாற்றம் முக்கியமானதல்லவா? பெண்களுக்காக தனியிதழ் வெளியிடலாமே?*

● முக்கியமானது தான். ஆனால் இப்போது பெண்களுக்காகத் தனியிதழ் வெளியிடுவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. அவை ஏற்படும் போது நிச்சயம் தனியிதழ் வெளியிடுவோம். அதுவரை இப்போதைய இதழ்களிலேயே உரிய முக்கியத்துவம் அளிப்போம்.